# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம்*

---

*(2006 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மே மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

***விலை: ரூபா 21.25*** ***தபாற் செலவு: ரூபா 7.50***

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*]

*ச. வ. ஒ. 8/2004*

**இலங்கையில், இலத்திரனியல் வடிவில் ஒப்பந்தங்களின் உருவாக்கத்தையும் தரவுத் தகவல்களையும் வேறு தகவல் தொடர்புகளையும் படைத்தலையும் பரிமாற்றம் செய்தலையும் ஏற்றங்கீகரிப்பதற்கும் அவற்றிற்கு வசதியளிப்பதற்கும் ; சான்றளிப்பு அதிகாரசபையொன்றை நியமிப்பதற்கும் மற்றும் சான்றளிப்புச் சேவை வழங்குநர்களின் தராதர அங்கீகாரத் திற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்பு டைய அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

*__1.__ (1) இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*(2) இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமொன்றாக சான்றுப்படுத்தப்பட்ட தேதி யன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன், மற்றைய ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

## *அத்தியாயம்* I

### பொது ஏற்பாடுகள்

*சட்டத்தின் குறிக்கோள்கள்.*

*__2.__ சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—*

*(அ) சட்டத் தடைகளை நீக்கி சட்ட நிட்சயத் தன்மையைத் தாபிப்பதன்மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச இலத்திர னியல் வர்த்தகத்திற்கு வசதியளித்தலும் ;*

*(ஆ) இலத்திரனியல் வர்த்தகத்தின் நம்பகமான வடிவங்க ளின் பாவனையை ஊக்குவித்தலும் ;*

(இ) அரசாங்கத்தில் ஆவணங்களை இலத்திரனியல் முறையில் கோப்பிடுதலுக்கு வசதியளித்தலும் நம்பகமான வடிவங்களிலான இலத்திரனியல் தகவல் தொடர்புகள் வாயிலாக அரசாங்க சேவைகளை வினைத்திறனுடன் வழங்குவதனை ஊக்குவித்தலும் ; அத்துடன்

(ஈ) தரவுத் தகவல்களினதும் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தகவல் தொடர்புகளினதும் உண்மைத்தன்மையிலும், திட்பத்திலும், நம்பகத்தன்மையிலும் பொதுமக்களின் நம்பிக்கையை ஊக்குவித்தலும்.

## அத்தியாயம் II

### இலத்திரனியல் வடிவத்திலான தரவுத் தகவல்களையும் வேறு தகவல் தொடர்புகளையும் ஏற்றங்கீகரித்தல்

இலத்திரனியல் பதிவேடுகளுக்கு சட்ட ஏற்றங்கீகரிப்பு.

**3.** தரவுத் தகவல்கள் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்புகள் எவையும் அவை இலத்திரனியல் வடிவத்திலுள்ளன என்ற ஏதுவின்மீது அவற்றிற்குச் சட்ட ஏற்றங்கீகரிப்பு, பயன், செல்லுபடி யாந்தன்மை அல்லது வலுவுக்கிடப்படற்பாலதாம் தன்மை மறுக்கப்படுதலாகாது.

எழுத்திருப்பதற்கான தேவைப்பாடு.

**4.** இலங்கையில் அப்போதைக்கு வலுவிலிலுள்ள எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் குறித்தசில சாதனங்களுக்கு, அவை எழுத்திலிடப்பட்டிருப்பின் மட்டுமே சட்ட வலிதுடையமையை அளிக்கும் நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய தேவைப்பாடு, இலத்திரனியல் வடிவத்திலுள்ள ஒரு தரவுத்தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பானது, அதில் அடக்கப்பட்ட தகவல் பின்னரான குறிப்பீட்டிற்குப் பயன்படுத்தக்கூடியவாறு அணுகக் கூடியதாகவிருப்பின், திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் :

மூலவடிவத்திலான தேவைப்பாடு.

**5.** (1) முன்வைக்கப்படவேண்டிய அல்லது பிடித்துவைக்கப்படவேண்டிய தகவல் மூலவடிவத்திலிருத்தல் வேண்டுமெனச் சட்டம் தேவைப்படுத்துமிடத்து, தகவல் இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கச்செய்யப்பட்ட நேரத்திலிருந்து அதன் திட்பம் தொடர்பாக நம்பகமான உறுதிப்பாடொன்று இருக்குமாயின் அத்துடன்

இலத்திரனியல் தரவுத் தகவலில், இலத்திரனியல் ஆவணத்தில் இலத்திரனியல் பதிவேட்டில் அடக்கப்பட்ட தகவல் கிடைக்கக் கூடியதாகவும் பின்னராகக் குறிப்பீட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய தாகவும் இருக்குமாயின் அத்தகைய தேவைப்பாடு, இலத்திரனியல் வடிவத்திலுள்ள தரவுத்தகவல் ஒன்றினால், இலத்திரனியல் ஆவணத்தால், இலத்திரனியல் பதிவேட்டால் அல்லது வேறு தகவல் தொடர்பினால் திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு –

(அ) தகவலின் திட்பத்தை மதிப்பீடு செய்தவற்கான மூலப்பிர மாணமானது, வழமையான தகவல் தேக்க அல்லது வெளிக்காட்டல் நெறிமுறையில் எழுகின்ற ஏதேனும் புறக்குறிப்பை அல்லது ஏதேனும் மாற்றத்தைச் சேர்ப்பது தவிர, அது முழுமையாகவும் மாற்றப்படாமலும் இருந்துள்ளதா என்பதாக இருக்கும் ; அத்துடன்

(ஆ) உறுதிப்பாட்டின் நம்பகத்தன்மைக்கான தரமானது, தகவல் எந்நோக்கத்திற்காகப் பிறப்பாக்கம் செய்யப் பட்டதோ அந்நோக்கத்தையும் இயைபான வேறு எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு மதிப்பீடு செய்யப் படுதல் வேண்டும்.

பிடித்துவைப் பதற்கான தேவைப்பாடு.

**6.** குறித்த சில தகவல்கள் பிடித்து வைக்கப்பட வேண்டுமென்ற ஏதேனும் சட்டத்தின் கீழான தேவைப்பாடானது, அத்தகைய தகவல் இலத்திரனியல் வடிவத்தின் மூலமாய் பிறப்பாக்கம் செய்யப்படவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் –

(அ) தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திர னியல் பதிவேடு அல்லது வேறு தகவல் அதன் ஆதி வடிவத்தின் பின்னரான குறிப்பீட்டிற்காக பயன்படுத் தப்படற்பாலதாகும் வகையில் அணுகக்கூடியதாக இருப்பின் ;

(ஆ) மூலமாய் பிறப்பாக்கம் செய்யப்பட்டவாறு, அனுப்பப் பட்டவாறு அல்லது பெறப்பட்டவாறு தரவுத் தகவலின் இலத்திரனியல் ஆவணத்தின், இலத்திரனியல் பதிவேட் டின் அல்லது தகவல் தொடர்பின் உள்ளடக்கங்களும்

வடிவமும், அது மூலமாய் பிறப்பாக்கஞ் செய்யப்பட்ட, அனுப்பப்பட்ட அல்லது பெறப்பட்ட அதே உள்ளடக்கங்களையும் வடிவத்தையும் அச்சொட்டாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நிகழ்த்திக்காட்டப்பட முடியுமாயின் ; அத்துடன்

(இ) தரவுத் தகவலின், இலத்திரனியல் ஆவணத்தின், இலத்திரனியல் பதிவேட்டின் அல்லது வேறு தகவல் தொடர்பின் மூலத்தையும் சேர்விடத்தையும் அத்துடன் அது பிறப்பாக்கஞ் செய்யப்பட்ட, அனுப்பப்பட்ட அல்லது பெறப்பட்ட தேதியையும் நேரத்தையும் இனம் காண இயலச்செய்கின்றவாறான அத்தகைய தகவல், எதுவுமிருப்பின், அது பிடித்து வைக்கப்பட்டிருப்பின்,

அதனை இலத்திரனியல் வடிவத்திலான தரவுச் செய்தியில், இலத்திரனியல் ஆவணத்தில், இலத்திரனியல் பதிவேட்டில் அல்லது வேறு தகவல் தொடர்பில் பிடித்துவைப்பதன் மூலம் திருப்திப்படுத்தப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் இலத்திரனியல் பதிவேடொன்றை அனுப்புவதனை அல்லது பெறுவதனை இயலச்செய்யும் நோக்கத்திற்காக மாத்திரம் தன்னியக்க முறையில் பிறப்பாக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் தகவலுக்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

*இலத்திரனியல் கையொப்பங்களின் சட்ட அங்கீகாரம்.*

**7.** ஏதேனும் தகவல் அல்லது தகவல் தொடர்பு கையொப்பத்தை இடுவதன் மூலம் சான்றுறுதி செய்யப்படவேண்டுமென அல்லது ஏதேனும் சாதனம் கையொப்பமிடப்படவேண்டுமென அல்லது எவரேனும் ஆளின் கையொப்பத்தைக் கொண்டிருக்கவேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்கின்றவிடத்து, அப்போது அத்தகைய சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவல் அல்லது விடயம் இலத்திரனியல் கையொப்பத்தின் வாயிலாக சான்றுறுதி செய்யப்படின் அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

விளக்கம்.- இப்பிரிவின் நோக்கத்திற்காக "கையொப்ப மிடுதல்" என்பது அதன் இலக்கண வேறுபாடு களுடனும் ஒரே மரபு மூலச் சொல்லமைப்பு களுடனும், ஆளொருவர் தொடர்பில் ஏதேனும் ஆவணத்தின்மீது அவரது கையினால் எழுதப் பட்ட கையொப்பத்தை அல்லது குறியை இடுதல் எனப் பொருள்படுதல் வேண்டும் என்பதுடன், "கையொப்பம்" என்னும் சொல்லமைப்பு அதற் கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அரசாங்க நிறுவனங்களிலும் நியதிச் சட்டக் குழுமங்களிலும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் இலத்திரனியல் கையொப்பங்களினதும் பயன்பாடு.*

**8.** (1) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம் -

(அ) ஏதேனும் படிவத்தை, விண்ணப்பத்தை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தை குறிப்பிட்டவொரு முறையில் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன், அலுவலகத்துடன், குழுமத்துடன் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில், அலுவலகத்தில், குழுமத்தில் அல்லது அரசாங்கத்தினால் அல்லது நியதிச்சட்டக் குழுவொன்றினால் சொந்தமாகக் கொண்டிருக்கப்படுவதும் அதனால் கட்டுப்படுத்தப்படுவதுமான முகவராண்மையில் கோப்பிடுதலை ;

(ஆ) ஏதேனும் உரிமத்தின், அனுமதிப்பத்திரத்தின் அல்லது அங்கீகாரத்தின் வழங்கீட்டை அல்லது அளிப்பை ; அல்லது

(இ) குறிப்பிட்டவொரு முறையில் பயனுறுத்தப்படவேண்டிய பணத்தின் பெறுகையை அல்லது கொடுப்பனவை, பெறுதலை அல்லது வேறு கொடுக்கல் வாங்கலை,

தேவைப்படுமிடத்து, அப்போது, அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது, எது எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப, அத்தகைய கோப்பிடல், உருவாக்கம், பிடித்து வைத்தல், வழங்கீடு, அளிப்பு, பெறுகை, கொடுப்பனவு, நாடிப் பெறுகை அல்லது கொடுக்கல் வாங்கல், இயைபான அமைச்சினால், அரசாங்கத் திணைக்களத்தால், நிறுவனத்தால், நியதிச் சட்டக்குழுவால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் அல்லது இதனையொத்த வேறு குழுவால் விதித்துரைக்கப் படக்கூடிய வாறான இலத்திரனியல் பதிவேடுகளின் வடிவத்தில் பயனுறுத்தப்படுமாயின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப் படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட இலத்திரனியல் பதிவேடுகளின் தேவைப்படுத்தும் இயைபான அதிகாரசபை இலத்திரனியல் தகவல் தொடர்புகளின் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாட்டுக்கு அதிகாரமளிக்கும் அல்லது வசதியளிக்கும் நோக்கத்திற்கு என –

(அ) அத்தகைய இலத்திரனியல் பதிவேடுகள், கோப்பிடப்பட வேண்டிய, உருவாக்கப்படவேண்டிய, பிடித்துவைக்கப் படவேண்டிய அல்லது வழங்கப்பட வேண்டிய முறையையும் படிவத்தையும் ;

(ஆ) அத்தகைய இலத்திரனியல் ஆவணங்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகள் கையொப்பமிடப்பட வேண்டியவிடத்து தேவைப்படுத்தப்படும் இலத்திர னியல் கையொப்பத்தின் வகையை ;

(இ) இலத்திரனியல் ஆவணங்களுக்கு அல்லது இலத்திரனி யல் பதிவேடுகளுக்கு அத்தகைய கையொப்பம் இடப்பட வேண்டிய முறையையும் வடிவத்தையும் அத்துடன் ஆவணங்களைக் கோப்பிடும் அத்தகைய ஆளினால் பயன்படுத்தப்பட்ட சான்றுப்படுத்தும் அதிகாரசபை யின் அல்லது சான்றளிப்புச் சேவை வழங்குநரின் அடையாளத்தையும் அல்லது அது அல்லது அவர் கொண்டிருக்க வேண்டிய மூலப்பிரமாணத்தையும் ;

(ஈ) இலத்திரனியல் ஆவணங்களின், பதிவேடுகளின், நாடிப் பெறுகைகளின், கொடுக்கல் வாங்கல்களின் அல்லது கொடுப்பனவுகளின் அந்தரங்கத் தன்மையை, உண்மைத் தன்மையை அத்துடன் திட்பத்தைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கட்டுப்பாட்டு நடைமுறையையும் அத்துடன் நடவடிக்கை முறைகளையும் ;

(உ) பந்தி (அ) என்பதன்கீழ் ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற் கான, பிடித்துவைப்பதற்கான அல்லது வழங்குவதற் கான ஏதேனும் கட்டணத்தின் அல்லது அறவீடுகளின் கொடுப்பனவுமுறையை அல்லது செய்முறைகளை ;

(ஊ) ஓர் ஆவணத்தை, அறிவித்தலை அல்லது சாதனத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட வேண்டுமென அல்லது எழுத்தில் அல்லது வேறு வகையில் சான்றளிக்கப்பட வேண்டுமென அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட எதனையும் செய்யும் முறையை ;

(எ) அஞ்சலில் அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறு ஒப்படை வழிமுறைகளால் செய்யப்படவேண்டுமென எவை யேனும் அத்தகைய ஏற்பாடுகளின்கீழ்த் தேவைப்படுத் தப்பட்ட அல்லது செய்யப்படக்கூடிய எதனையும் செய்யும் முறையை ;

(ஏ) ஆளொருவரின் கையொப்பத்தால் அல்லது இலச்சினை யினால் அதிகாரமளிக்கப்பட வேண்டுமென அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படக்கூடிய எதனையும் செய்வதனை ;

(ஐ) சத்தியத்தின்கீழ்ச் செய்யப்பட வேண்டுமென எவையேனும் அத்தகைய ஏற்பாடுகளின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கூற்றை அல்லது வெளிப்படுத்துகையைச் செய்வதனை ;

(ஒ) அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளின்கீழ்ச் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது செய்யப் படக்கூடிய ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதனை ;

(ஓ) தற்பொழுது நேரொத்த கடதாசி ஆவணங்களுக்கெனக் குறித்துரைக்கப்பட்டிருக்கும் இலத்திரனியல் பதிவேடு கள் அல்லது கொடுப்பனவுகள் தொடர்பிலான வேறு ஏதேனும் விடயத்தை,

குறித்துரைப்பதன் மூலம் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதலை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்.

இலத்திரனியல் வடிவிலான வர்த்தமானியில் முதலிய வற்றின் வெளியீடு வெளியீடாகக் கருதப்படும்.

**9.** ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பதிவேடுகள் இலத்திரனியல் வடிவிலிருப் பதை வற்பு றுத்துவதற்கான உரிமையில்லை.

**10.** முற்போந்த பிரிவுகளில் அடங்கியுள்ளவை எவையும், ஏதேனும் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், நிறுவனம், நியதிச்சட்டக் குழு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அதனையொத்த வேறு குழு ஆவணம் எதனையும் இலத்திரனியல் பதிவேடுகளின் வடித்தில் ஏற்றுக்கொள்ள அல்லது வழங்க வேண்டுமென அல்லது ஏதேனும் பணக்கொடுக்கல் வாங்கலை இலத்திரனியல் வடிவத்தில் பயனுறுத்த வேண்டுமென வற்புறுத்து வதற்கு ஆளெவருக்கும் உரிமையொன்றை உரித்தாக்குவதாகாது.

## அத்தியாயம் III

### இலத்திரனியல் ஒப்பந்தங்கள்

இலத்திரனியல் ஒப்பந்தங்கள்.

**11.** ஒப்பந்தம் உருவாக்கப்படும் விடயத்தில் திறத்தவர்களால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலன்றி, கொடை முனைவொன்றும் கொடைமுனைவொன்றின் ஏற்பும் இலத்திர னியல் வடிவத்தில் செய்யப்படலாம். இலத்திரனியல் வடிவத்தி லுள்ளது என்ற ஏதுவின்மீது மாத்திரம் ஒப்பந்தமொன்றின் செல்லுபடியாந்தன்மை அல்லது வலுவுக்கிடப்படற்பாலதாம் தன்மை மறுக்கப்படுதலாகாது.

இலத்திரனியல் பதிவேடுகளை ஏற்றிக் கூறல்.

**12.** (1) ஒரு மூலகாரனுக்கும் முகவரிகாரனுக்குமிடையில் வேறு வகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலன்றி, தகவல் தொடர்பொன்று, இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பு –

(அ) மூலகாரனாலேயே ;

(ஆ) அத்தகவல் தொடர்பு, இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பு தொடர்பில் மூலகாரனுக்காகவும் அவர் சார்பிலும் செயற்படுத்துவதற்கான அதிகாரம்பெற்ற ஆளொருவரால் ; அல்லது

(இ) மூலகாரனால் அல்லது அவர் சார்பில் செய்நிரல் செய்யப்பட்ட தன்னியக்கத் தகவல் முறைமையொன்றினால்,

அனுப்பப்பட்டிருப்பின், அது மூலகாரனது எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மூலகாரனுக்கும் முகவரிகாரனுக்குமிடையில் வேறுவகையான உடன்பட்டுக் கொள்ளப்பட்டாலன்றி, முகவரிகாரன் தகவல் தொடர்பொன்றை, இலத்திரனியல் ஆவணத்தை, இலத்திரனியல் பதிவேட்டை அல்லது வேறு தகவல் தொடர்பை மூலகாரனுடையதெனக் கருதுதல் வேண்டும் என்பதுடன் –

(அ) இலத்திரனியல் ஆவணத்தின், இலத்திரனியல் பதிவேட்டின் அல்லது வேறு தகவலின், உண்மைத் தன்மையைச் சந்தேகிப்பதற்கு முகவரிகாரனுக்குக் காரணம் எதுவுமில்லாவிடில் ; அல்லது

(ஆ) அத்தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு உண்மைத் தன்மையற்றது என முகவரிகாரன் அறிந்திருக்கின்றவிடத்து அல்லது நியாயமான கவனத்தைப் பிரயோகிப்பதன் மூலம் அறிந்திருக்க வேண்டிய எவையேனும் சூழ்நிலைகள் இல்லாதிருப்பின்,

அந்த ஊகத்தின்மீது செயற்படுவதற்கு உரித்துடையவருமாகின்றார்.

பெற்றமை ஒப்புக்கோடல்.

**13.** (1) பெற்றமையை ஒப்புக்கோடல் செய்தலானது குறிப்பிட்டவொரு வடிவத்தில் அல்லது குறிப்பிட்டவொரு செய்முறையில் கொடுக்கப்படுதல் வேண்டும் என மூலகாரன் முகவரிகாரனுடன் உடன்பட்டுக்கொண்டிராதவிடத்து,

(அ) முகவரிகாரனால் தன்னியக்கமாக்கப்பட்ட அல்லது வேறுவகையிலான ஏதேனும் இலத்திரனியல் ஆவணத்தால், இலத்திரனியல் பதிவேட்டால் அல்லது தொடர்பாடலினால் ; அல்லது

(ஆ) தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணத்தால், இலத்திரனியல் பதிவேட்டால் பெறப்பட்டுள்ளது என மூலகாரனுக்கு உணர்த்தப்போதுமானளவான, முகவரிகாரனின் ஏதேனும் நடத்தையால்,

அத்தகைய ஒப்புக்கோடலொன்று செய்யப்படலாம்.

(2) அத்தகைய தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணத்தால், இலத்திரனியல் பதிவேட்டால் அவரால் பெறப்பட்டமைக்கான ஒப்புக்கோடல் பெறப்பட்டதன்மீது மாத்திரமே தொடர்பாடல் பிணிக்கின்றாதல் வேண்டும் என மூலகாரன் விதித்துள்ளவிடத்து, அப்போது, ஒப்புக்கோடல் அவ்வாறு பெறப்பட்டிருந்தாலன்றி தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு மூலகாரனால் ஒருபோதும் அனுப்பப்படவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கிடைக்கப்பெற்றமைபற்றிய அத்தகைய ஒப்புக்கோடல் கிடைக்கப்பெறுவதன்மீது மாத்திரமே தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு பிணிக்கின்றதாதல் வேண்டும் என மூலகாரனால் விதித்துரைக்கப்படாதவிடத்தும், கிடைக்கப்பெற்றமை பற்றிய ஒப்புக்கோடல் குறித்துரைக்கப்பட்ட அல்லது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நேரத்திற்குள் அல்லது நேரம் குறித்துரைக்க அல்லது உடன்பட்டுக்கொள்ளப்படாதுள்ளவிடத்து நியாயமான நேரத்திற்குள் மூலகாரனால் பெறப்பட்டிராதவிடத்தும், அப்போது, மூலகாரன் பெற்றமை பற்றிய ஒப்புக்கோடல் அவரால் பெறப்படவில்லை எனக் குறிப்பிட்டும், பெற்றமைபற்றிய ஒப்புக்கோடல் தம்மால் பெறப்பட வேண்டிய நியாயமான நேரமொன்றைக் குறித்துரைத்தும் முகவரிகாரனுக்கு அறிவித்தல் கொடுக்கலாம் என்பதுடன், மேலே கூறப்பட்ட நேரவரையறைக்குள் பெற்றுக்கொண்டமை பற்றிய ஒப்புக்கோடல் கிடைக்கப்பெறாவிடில், அவர் முகவரிகாரனுக்கு அறிவித்தல் கொடுத்ததன் பின்னர் தொடர்பாடல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு ஒருபோதும் அனுப்பப்பட்டிருக்கவில்லை என்னுமாப்போல் கருதுதல் வேண்டும்.

*இலத்திரனியல் பதிவேடுகள் அனுப்பப்பட்டதும் பெறப்பட்டதுமான நேரமும் இடமும்.*

**14.** (1) மூலகாரனும் முகவரிகாரனும் வேறுவகையாக உடன்பட்டுக்கொண்டாலன்றி, தரவுத் தகவல் அல்லது தொடர்பாடலொன்றின் அனுப்புகையானது மூலகாரனின் கட்டுப்பாட்டிற்கு வெளியேயுள்ள தகவல் முறைமையொன்றில் அது பிரவேசிக்கும்பொழுது நிகழ்கிறது, அல்லது தரவுத் தகவல் அல்லது தொடர்பாடல் மூலகாரனின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அல்லது இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு மூலகாரனின் சார்பில் அதனை அனுப்பிய திறந்தவரின் கட்டுப்பாட்டின்

*கீழுள்ள தகவல் முறைமையொன்றை விட்டு அது செல்லா திருப்பின், தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திர னியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் பெறப்பட்ட நேரத்தில் அதன் அனுப்புகை இடம்பெறுகின்றது.*

*(2) மூலகாரனும், முகவரிகாரனும் வேறுவகையாக உடன் பட்டுக்கொண்டாலன்றி, தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தொடர்பாடலொன்று பெறப்பட்ட நேரமானது பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும், அதாவது–*

*(அ) முகவரிகாரன் தகவல் முறைமையொன்றை, தரவுத் தகவல்களை அல்லது தொடர்பாடலைப் பெறும் நோக்கத்திற்கென குறித்துக்காட்டியிருப்பின்–*

*(i) தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திர னியல் பதிவேடு அல்லது தொடர்பாடலானது குறித்துக்காட்டப்பட்ட தகவல் முறைமையில் பிர வேசிக்கும் நேரத்தில் பெறுகை இடம் பெறுகின்றது; அல்லது*

*(ii) தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திர னியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் குறித்துக் காட்டப்பட்ட தகவல் முறைமையல்லாத முகவரி காரனின் தகவல் முறைமையொன்றுக்கு அனுப்பப் படின், தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் முகவரிகாரனால் மீட்கப்படும் நேரத்தில் பெறுகை இடம்பெறுகின்றது ;*

*(ஆ) முகவரிகாரன் குறித்துரைக்கப்பட்ட நேர விதிப்புக்கள் எவையுமிருப்பின், அவற்றுடன் சேர்த்துத் தகவல் முறைமையொன்றைக் குறித்துக்காட்டியிராவிடில் தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திர னியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் முகவரி காரனின் தகவல் முறைமையில் பிரவேசிக்கும்பொழுது பெறுகை இடம்பெறுகின்றது.*

*(3) மூலகாரனும் முகவரிகாரனும் வேறுவகையாக உடன்பட்டுக் கொண்டிருந்தாலன்றி, தரவுத் தகவல் இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் மூலகாரன்*

தனது தொழிலிடத்தைக் கொண்டுள்ள இடத்தில் அனுப்பப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும். என்பதுடன், முகவரிகாரன் தனது தொழிலிடத்தைக் கொண்டுள்ள முகவரியில் பெறப்படுவதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) தகவல் முறைமை அமைந்துள்ள இடம் (3) ஆம் உட்பிரிவின்கீழ்த் தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தொடர்பாடல் பெறப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட இடத்திலிருந்து வேறுபட்டிருக்கக்கூடும் என்பது எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்கு–

(அ) மூலகாரன் அல்லது முகவரிகாரன் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலிடங்களைக் கொண்டிருப்பின் பிரதான தொழிலிடமே தொழிலிடமாதல் வேண்டும் ;

(ஆ) மூலகாரனுக்கு அல்லது முகவரிகாரனுக்கு தொழிலிடமொன்று இல்லாவிடின் அவரது வழமையான வதிவிடமே தொழிலிடமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுமமொன்று தொடர்பில் "வழமையான வதிவிடம்" என்பது, அது பதிவு செய்யப்பட்டுள்ள இடம் என்று பொருள்படும் ;

(ஈ) மூலகாரனும் முகவரிகாரனும் வெவ்வேறு நேரவலயங்களிலிருப்பின் நேரம் என்பது அனைத்துலக நியம நேரத்தைக் குறிப்பீடு செய்யும்.

உடன்படிக்கையை வேறுபடுத்துதல்.

**15.** அமைச்சரானவர் III ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் தரவுத் தகவல்களை இலத்திரனியல் தகவல், இலத்திரனியல் ஆவணம், அல்லது தொடர்பாடலை பிறப்பாக்கஞ்செய்தல், அனுப்புதல், பெறுதல், தேக்குதல் அல்லது வேறுவகையில் முறைவழிப்படுத்துதல் என்பதைப் பற்றிநிற்கும் ஒப்பந்தமொன்றிற்கான திறந்தவர்களுக்கிடையில் ஒப்பந்தத்திற்கான திறத்தவர்களுக்கிடையில் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடிய விடயங்களை ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கலாம்.

*சான்றளிப்புச் சேவை வழங்குவோரின் பொறுப்புக்கள்.*

**16.** (1) ஒரு சான்றளிப்புச் சேவை வழங்குநர் இலத்திரனியல் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது வேறு தொடர்பாடல் வடிவத்தில் அவர் அணுக்கம் மட்டுமே அளிக்கும் மூன்றாம் திறந்தவரின் ஏதேனும் தகவல் தொடர்பில் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்காக இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பெதற்கும்–

(அ) அத்தகைய தகவலின் ஆக்கம், வெளியீடு பரப்பல் அல்லது விநியோகம் அல்லது அத்தகைய தகவலில் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றின்மீது ; அல்லது

(ஆ) அத்தகைய தகவலின் அல்லது அது தொடர்பில் உளதாயிருக்கும் எவையேனும் உரிமைகளின் மீறுகையின்மீது,

அத்தகைய பொறுப்பானது தாபிக்கப்பட்டிருப்பின், ஆளாக்கப்படுதலாகாது.

(2) இப்பிரிலுள்ள எதுவும்–

(அ) ஒப்பந்தத்தின்மீது தாபிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை;

(ஆ) ஒரு சான்றளிப்புச் சேவை வழங்குநர் என்றவகையில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட உரிமமளித்தல் அல்லது வேறு ஒழுங்குபடுத்துகை வரைவின்மீது அத்தகைய சேவையை வழங்குகின்ற அவரது கடப்பாட்டை ; அல்லது

(இ) ஏதேனும் தகவலுக்கான அணுக்கத்தை அகற்றுவதற்கு, தடுப்பதற்கு அல்லது மறுப்பதற்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது நீதிமன்றமொன்றினால் சுமத்தப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை,

பாதிப்பதாதலாகாது.

*ஐயத்தைத் தவிர்த்தல்.*

**17.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது :–

(அ) கொடைமுனைவொன்றும் அதன் ஏற்பொன்றும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இலத்திரனியல் கையொப்பமொன்று இணைக்கப்பட்ட அல்லது தர்க்கரீதியில் அதனுடன் சேர்க்கப்பட்ட இலத்திரனியல் பதிவேடொன்றின்மூலம் எடுத்துரைக்கப்படின், இலத்

திரனியல் கையொப்பமொன்று, அது இலத்திரனியல் கையொப்பமொன்று என்ற ஏதுவின்மீது மாத்திரம் அதற்கான சட்டப்பயன் மறுக்கப்படுதலாகாது ;

(ஆ) ஒப்பந்தமொன்றை உருவாக்குகையில் இலத்திரனியல் தொடர்பாடலொன்று பயன்படுத்தப்படின், அத்தகைய நோக்கத்திற்கு இலத்திரனியல் பதிவேடொன்று பயன் படுத்தப்பட்டிருந்தது என்ற ஏதுவின்மீது மாத்திரம் ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் தன்மை அல்லது வலுவுக்கிடப்படற்பாலதாகும் தன்மை மறுக்கப்படுத லாகாது ;

(இ) கொடைமுனைபவர் ஏற்பைத் தெரிவிக்கும் முறையை விதித்துரைக்கலாம் என்ற ஒப்பந்தங்கள் தொடர்பிலான பொதுச் சட்டத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடு இவ்வத்தியாயத்தில் அடங்கியுள்ள எதனாலும் பாதிக்கப்படுதலாகாது ;

(ஈ) தன்னியக்கத் தகவல் முறைமையொன்றினதும் இயற்கை ஆளொருவரினதும் இடைப்படு செயற்பாட்டின் மூலம் அல்லது தன்னியக்கத் தகவல் முறைமைகளின் இடைப் படு செயற்பாட்டின்மூலம் உருவாக்கப்பட்ட ஒப்பந்த மொன்று, இறுதி ஒப்பந்தம் அல்லது தன்னியக்கத் தகவல் முறைமையால் நிறைவேற்றப்பட்ட செயல்கள் ஒவ்வொன்றும் இயற்கை ஆளொருவரால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது அவரது இடையீடு இருந்திருக்கவில்லை என்ற ஏதுவின்மீது மாத்திரம் அதற்கான செல்லுபடியாகுந்தன்மை அல்லது வலவுக்கி டப்படற்பாலதான தன்மை மறுக்கப்படுதலாகாது.

## அத்தியாயம் IV

### சான்றளிப்பு அதிகாரசபையும் சேவை வழங்குநர்களின் சான்றளிப்பும்

*சான்றளிப்பு அதிகார சபையொன்றைப் பெயர்குறித்து நியமித்தல்.*

**18.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சான்றளிப்பு அதிகார சபையொன்று, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தா லோசனையுடன் அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) சான்றளிப்பு அதிகாரசபையொன்றைப் பெயர்குறித்து நியமிக்குகையில் அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை, பகிரங்கக் கூட்டுத்தாபனத்தை, நியதிச்சட்டக்குழுவை, நிறுவனத்தை அல்லது அதிகாரசபைப் பெயர்குறித்து நியமிக்கலாம் ; அதன்மீது இப் பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் பொறுப்பிக்கப் படுதல் வேண்டும். அமைச்சர் கட்டளையை ஆக்குகையில், அதன் பணிகள், மனிதவலு என்பன தொடர்பில் பெயர்குறிப்பிடப் படவுள்ள அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத் தாபனத்தின், நியதிச்சட்டக் குழுவின், நிறுவனத்தின் அல்லது அதிகாரசபையின் ஆற்றலையும் தராதர அங்கீகாரம்பெற்ற சான்றளிக்கும் சேவை வழங்குநர்களால் சான்றளிக்கும் சேவைகள் திறமையுடன் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துகையில் இச்சட்டத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுகையில் அனைத்தையும் உள்ளிட்ட அதன் கூட்டுமொத்தத் திறமையையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

*சான்றளிப்பு அதிகார சபையின் தத்துவங்கள்.*

**19**. சான்றளிப்பு அதிகாரசபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தராதர அங்கீகாரம்பெற்ற சான்றளிக்கும் சேவை வழங்குநர்களுக்கு அடிப்படையாக அமையும் மூலப் பிரமாணத்தையும் அவர்களால் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் இனம் காணுதல் ;

(ஆ) மேன்முறையீடுகளை விசாரணை செய்தல் மற்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு தராதர அங்கீகார மளிப்பதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையைக் குறித்துரைத்தல் ;

(இ) விடயத்திற்கேற்ப, 20 ஆம் பிரிவின்கீழ்த் தராதர அங்கீ காரமளிக்க அல்லது புதுப்பிக்க மறுக்கப்படும் பட்சத் தில் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கான, நடவடிக்கைகளைக் குறித்துரைத்தல் ;

(ஈ) சான்றளிக்கும் சேவைவழங்குநர்க்கு விதித்துரைக் கப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக உரிமங்களை அல்லது வேறு வடிவத்திலான அதிகார அளிப்பை வழங்குதல் ;

(உ) விதித்துரைக்கப்படக்கூடியனவும் சான்றளிக்கும் சேவை வழங்குநர்களால் பேணப்படவேண்டியவையுமான அத்தகைய பதிவேடுகளையும் இடாப்புகளையும் பேணுமாறு சான்றளிக்கும் சேவை வழங்குநர்களைத் தேவைப்படுத்தல் ;

(ஊ) சான்றளிக்கும் சேவை வழங்குநர்களிடமிருந்து அவசியமாகக்கூடியவாறான தகவலை காலத்திற்குக் காலம் கோருதல் மற்றும் அத்தகைய சான்றளிக்கும் சேவை வழங்குநர்க்கு பணிப்புரைகள் வழங்குதல்.

*சான்றளிக்கும் சேவை வழங்குநருக்குத் தராதரமளித்தல்.*

**20.** (1) ஆளெவரும், 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியான தராதர அங்கீகாரச்சான்றிதழொன்றை வைத்திருந்தாலன்றி, அவர் சான்றளிக்கும் சேவைகளை வழங்கும் தராதர அங்கீகாரம் பெற்ற சான்றளிக்கும்சேவை வழங்கும்ஒருவராகத்தொழிற்படுதல் ஆகாது.

(2) இச்சட்டத்திலுள்ள எதுவும் தராதர அங்கீகாரம் பெறாமல் சான்றளிக்கும் சேவையை வழங்கும் தொழிலில் ஈடுபடுவதற்கு எவரேனும் சான்றளிக்கும் சேவை வழங்குநருக்குள்ள உரிமைகளுக்கு முட்டுக்கட்டையிடுவதாகவோ அல்லது ஏதேனும் விதத்தில் மட்டுப்படுத்துவதாகவோ பொருள்கொள்ளப்படுதலாகாது.

(3) ஒரு சான்றளிக்கும் சேவை வழங்குநர்க்கு, 19 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்ச் சான்றளிப்பு அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட மூலப் பிரமாணங்களுக்கு அமைவாக 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தராதர அங்கீகாரமளிக்கப்படலாம்.

## அத்தியாயம் V

### சான்றை ஆளும் விதிகள்

*சான்று விதிகளின் ஏல்தகவு.*

**21.** (1) சான்றுக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது, எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் பின்வரும் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்புடையனவாதல் வேண்டும் ;

(2) ஏதேனும் தரவுச் செய்தியொன்றில் ஏதேனும் தகவல்தொடர்பில், இலத்திரனியல் ஆவணத்தில் அல்லது இலத்திரனியல் பதிவேட்டில் அடங்கியுள்ள —

(அ) ஏதேனும் ஆய்பொருள் நிகழ்வை அல்லது இயைபான விடயத்தை தொட்டு நிற்கும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் தொழிலின், வியாபாரத்தின் அல்லது உயர்தொழிலின் நெறிமுறையின்போது அல்லது கிரமமாகக் கொண்டு நடாத்தப்படும் வேறு செயற்பாட்டின்போது தொகுக்கப்பட்ட, கிடைக்கப்பெற்ற அல்லது பெறப்பட்ட,

ஏதேனும் தகவல் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏல்தகவுடையதாதல் வேண்டும் :

ஆயின், ஆய்பொருள் நிகழ்வின் அல்லது இயைபான நிகழ்வின் நேரடி வாய்மொழிச் சான்று கிடைக்கக்கூடியதாகவிருப்பின் ஏல்தக்கதாதல் வேண்டுமென்பதுடன் தரவுத் தகவலென்றில், தகவல் தொடர்பில், இலத்திரனியல் ஆவணத்தில் அல்லது இலத்திரனியல் பதிவேட்டில் அடங்கியுள்ள தகவல் நம்பகரமானதல்ல அல்லது செவ்வையானதல்ல என நம்புவதற்குக் காரணம்எதுவும்இல்லாதிருத்தலும்வேண்டும்:

ஆயின், மேலும் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக –

(i) இறந்துள்ளவரான அல்லது அவரது உடல் அல்லது உள நிலைமை காரணமாக சாட்சியொருவராகச் சமுகமளிக்கப் பொருத்தமற்றவரான ; அல்லது

(ii) இலங்கைக்கு வெளியேயுள்ளவரும் அவரைக் கண்டு பிடிக்க நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆனால் கண்டுபிடிக்கப்படமுடியாதவருமான ;

(iii) பயம் காரணமாக வாய்மொழிச் சான்றழிக்க விரும்பாதவரான ; அல்லது

(iv) அவ்வாறு சான்றளிப்பதனின்று தடைசெய்யப்படுகின்றவரான,

ஆளொருவரால் செய்யப்பட்ட தரவுத் தகவலொன்றில், தகவலில், இலத்திரனியல் ஆவணத்தில், அல்லது இலத்திரனியல் பதிவேட்டில் தகவல் எதுவும் அடங்கியிருப்பின் அத்தகைய தகவல் தொடர்பிலான சான்று இருப்பின், அது ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, தரவுச் செய்தியொன்றில் அல்லது ஏதேனும் தகவல் தொடர்பில் அல்லது இலத்திரனியல் ஆவணத்தில் அல்லது இலத்திரனியல் பதிவேட்டில் அடங்கியுள்ள தகவலின் உண்மைத்தன்மையையும் அத்துடன் ஆளொருவரால் செய்யப்பட்ட இலத்திரனியல் ஆவணமொன்றின் அல்லது இலத்திரனியல் பதிவேடொன்றின் விடயத்தில் இலத்திரனியல் ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேடு அதனை ஆக்கியதாகக் கருதப்பட்ட ஆளினால் ஆக்கப்பட்டதாகவும் ஊகித்தல் வேண்டும் என்பதுடன் அதேபோன்று அதன்கண்ணுள்ள ஏதேனும் இலத்திரனியல் கையொப்பத்தின் அல்லது பிரித்துக்காட்டும் அடையாளச் சின்னத்தின் மெய்யியல்பை ஊகித்தலும் வேண்டும்.

*1995 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக மாட்டா.*

**22.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்தத் தரவுத் தகவலுக்கு அல்லது தொடர்பாடலுக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்த ஏதேனும் தரவுத் தகவலுக்கும் அல்லது தொடர்பாடலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் ஆகாது.

## அத்தியாயம் VI

### நானாவிதம்

*சட்டத்தின் ஏல்தகவின் மீதான மட்டுப்பாடு.*

**23.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் பின்வருவனவற்றிக்கு ஏற்புடையதாதலாகாது :–

(அ) விருப்பாவணமொன்று அல்லது வேறு ஏதேனும் மரணசாதன ஆதனவளிப்பு அது எப்பெயரில் அழைக்கப்படினும் அதன் உருவாக்கத்திற்கு அல்லது நிறைவேற்றுகைக்கு ;

(ஆ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் தொலைத்தொடர்பு முறைமையொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றுக்கு ;

(இ) (82 ஆம் அத்தியாயமான) மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான மாற்றுண்டியலொன்றுக்கு ;

(ஈ) (122 ஆம் அத்தியாயமான) அற்றோனித்தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அற்றோனித்தத்துவமொன்றுக்கு ;

(உ) (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்ட வாறான, ஆயின் அமைப்புவழி, உட்கிடை அல்லது விளைவுப் பயனான நம்பிக்கைப்பொறுப்பொன்று தவிர்ந்த, நம்பிக்கைப் பொறுப்பொன்றுக்கு ; அத்துடன்

(ஊ) அசைவற்ற ஆதனத்தின் அல்லது அத்தகைய ஆதனத்திலான ஏதேனும் அக்கறையின் விற்பனைக் கான அல்லது உரித்து மாற்றத்திற்கான ஒப்பந்த மொன்றுக்கு ;

(எ) இருபத்துநான்காம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளால் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்திற்கு, செயலுக்கு அல்லது கொடுக்கல்வாங்கலுக்கு,

ஒழுங்குவிதிகள்.

**24.** (1) அமைச்சர், தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப வியல் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தால் ஆக்கப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இச்சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயனளிக்கும் நோக்கத் திற்கென ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் விடயங்களுக்காகவும் அவை தொடர்பிலும், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.-

(அ) (i) அமைச்சுக்களினதும், அரசாங்கத் திணைக்களங்க ளினதும், அரசாங்கத்திற்குச் சொந்தமானவையும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுபவையு மான குழுக்களினதும் அல்லது முகவராண்மை களினதும் அத்துடன் நியதிச்சட்டக் குழுக்களி னதும் தேவைகளை நிறைவுசெய்வதற்குப் போதியளவு பாதுகாப்பானவையும் ;

(ii) சாத்தியப்படக்கூடிய அதிகபட்ச அளவுக்கு இடைச் செயற்பாடுடையனவுமான ;

இலத்திரனியல் உட்கட்டமைப்பையும் வழிகாட்டிகளையும் குறித்துரைத்தல் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நடைமுறைப்படுத்துகை தொடர்பில் சான்றளிப்பு அதிகாரசபையின் உறுப்பினர்களின் சேவை நிபந்தனைகள் ;

(இ) பதினெட்டாம் பிரிவின் நியதிகளின்படி ஒரு சான்றளிப்பு அதிகாரசபையாக நியமிக்கப்படும் ஆளொருவரின், ஆட்கள் குழுவின் அல்லது நிறுவனத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அத்துடன் அவர்களுக்கு ஏற்புடைத்தான வேறு நியதி நிபந்தனைகளும் ;

(ஈ) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றளிக்கும் சேவை வழங்குநர்களின் தராதர அங்கீகாரத்திற்கான மூலப்பிரமாணம், அதன் மறையீட்டியல் சேவைகள், இலத்திரனியல் கையொப்பம் அல்லது முன்னேற்ற இலத்திரனியல் கையொப்பம் அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கை முறைகள் மற்றும் இணைந்ததாகவுள்ள ஏதேனும் சட்டவிளைவுகள் ;

(உ) தராதர அங்கீகார சான்றிதழை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடுகளுக்குரிய நடவடிக்கைமுறை ;

(ஊ) சான்றளிக்கும் சேவைகளை வழங்குவதற்கு விழையும் ஆட்களிடம் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் ;

(எ) சான்றளிக்கும் சேவை வழங்குநர்களின் அங்கீகாரத்திற்கான நடவடிக்கைமுறை, அத்தகைய சான்றளிக்கும் சேவை வழங்குநர்களுக்கு உரிமங்கள் வழங்குதல், அத்துடன் அவர்களால் வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட சேவைகளின் வகுதிகள் ;

(ஏ) சான்றளிக்கும் சேவை வழங்குநர்களால் பேணப்பட வேண்டிய பதிவேடுகளும் மற்றும் அத்தகைய சான்றளிக்கும் சேவை வழங்குநர்களால் சான்றளிப்பு அதிகாரசபைக்குத் தகவல் கொடுத்துதவப்படவேண்டிய முறையும் ; அத்துடன்

(ஐ) பதினைந்தாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்கள்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியவாறான விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதலும் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னராகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி. இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய ஒழுங்குவிதிகள் அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட திகதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**25.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**26.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி .-

"முகவரிகாரன்" என்பது எந்த ஆளினால் தொடர்பாடல் பெறப்படவேண்டுமென மூலகாரன் முன்னுகின்றாரோ அந்த ஆள் எனப் பொருள்படும் என்பதுடன், இடைவருநர் ஒருவரை உள்ளடக்காது;

"சான்றளிப்பு அதிகாரசபை" என்பது சட்டத்தின் அத்தியாயம் iv இன் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட சான்றளிப்பு அதிகாரசபை என்று பொருள்படும்;

"சான்றளிக்கும் சேவைகள்" என்பது தகவலின் இரகசியத் தன்மையும், உண்மைத்தன்மையும், திட்பமும் காக்கப்படுவதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்கு மறையீட்டியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை வசதியளிக்குமாறு வடிவமைக்கப்பட்டதாக இலத்திரனியல் வடிவில் அத்தகைய தகவலை அனுப்புபவர்களுக்கு அல்லது பெறுபவர்களுக்கு அல்லது அத்தகைய தகவலை தேக்குபவர்களுக்கு வழங்கப்படும் ஏதேனும் சேவை என்று பொருள்படும் ;

"சான்றளிக்கும் சேவை வழங்குநர்" என்பது இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் சான்றளிக்கும் சேவைகளை வழங்குகின்ற ஆளொருவர் என்று பொருள்படும் ;

"தொடர்பாடல்" என்பது இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பில் செய்யுமாறு ஆளொருவர் தேவைப்படுத்தப்பட்ட அல்லது செய்வதற்குத தெரிவுசெய்கின்ற கொடை முனைவொன்றும் கொடைமுனைவை ஏற்றுக்கொள்ளுதலும் உட்பட ஏதேனும் கூற்று, வெளிப்படுத்துகை, கோரிக்கை, அறிவித்தல் அல்லது வேண்டுகோள் என்று பொருள்படும் ;

"கணினி" என்பது தகவல் வழிமுறைப்படுத்தும் ஆற்றல்களையுடைய இலத்திரனியல் அல்லது அதனையொத்த உபாயமொன்று என்று பொருள்படும் ;

"தரவுத் தகவல்" என்பது இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது இதனையொத்த வழிமுறைகளினால் பிறப்பாக்கப்படும் அனுப்பப்படும், பெறப்படும் அல்லது தேக்கப்படும் தகவல் என்று பொருள்படும் ;

"இலத்திரனியல்" என்பது ஊடகத்தைப் பொருட்படுத்தாமல் இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது அதனையொத்த ஆற்றல்களினால் பிறப்பாக்கப்படும், அனுப்பப்படும், பெறப்படும் அல்லது தேக்கிவைக்கப்படும் தகவல் என்று பொருள்படும் ;

"இலத்திரனியல் ஆவணம்" என்பது இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களை, பதிவேடுகளை, தகவலை, தொடர்பாடலை அல்லது கொடுக்கல் வாங்கலை உள்ளடக்கும் ;

"இலத்திரனியல் பதிவேடு" என்பது இலத்திரனியல் வாயிலாக உருவாக்கப்பட்ட, தேக்கிவைக்கப்பட்ட, பிறப்பாக்கப்பட்ட பெறப்பட்ட அல்லது தொடர்பு கொள்ளப்பட்ட ஒரு எழுத்திலான ஆவணம் அல்லது வேறு பதிவேடு என்று பொருள்படும் ;

"இலத்திரனியல் கையொப்பம்" என்பது இலத்திரனியல் ஆவணமொன்றின் உண்மைத்தன்மை, திட்பம், அல்லது இரண்டையும் நிலைநாட்டுவதற்காக அதனைச் சான்றுறுதி செய்கின்ற அத்துடன் அல்லது அங்கீகரிக் கின்ற எண்ணத்துடன் இலத்திரனியல் வடிவில் அதில் பிரயோகிக்கப்பட்ட, அதில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தர்க்க ரீதியாக அதனுடன் தொடர்புறுத்தப்பட்ட எவை யேனும் எழுத்துக்கள், இலக்கங்கள், சின்னங்கள், படிமங்கள், வரியுருக்கள் அல்லது அவற்றின் ஏதேனும் சேர்மானம் என்று பொருள்படும் ;

"தகவல்" என்பது நோக்குக் குறிமுறையும் ஊற்றுமூலக் குறிமுறையும் உட்பட பனுவல், தகவல், தரவு, குரல். ஒலி, தரவுத்தளம், ஒளித்தோற்றம், சமிக்ஞைகள், மென்பொருள், கணினி செய்நிரல்கள் என்பவற்றை உள்ளடக்கும் ;

"தகவல் முறைமை" என்பது தகவலை உருவாக்குவதற்கு, பிறப்பாக்குதற்கு, அனுப்புதற்கு, பெறுவதற்கு, தேக்கி வைப்பதற்கு, மீள் உருவாக்கம் செய்வதற்கு, காட்சிப் படுத்துவதற்கு, பதிவுசெய்வதற்கு அல்லது முறை வழிப்படுத்துவதற்கு ஆன இலத்திரனியல் முறைமை யொன்று என்று பொருள்படும் ;

"இடைவருநர்" என்பது இலத்திரனியல் தொடர்பாடலை அனுப்புதல், பெறுதல், தேக்கிவைத்தல் அல்லது முறைவழிப்படுத்துதல் அல்லது அதுதொடர்பாக வேறு சேவைகளை வழங்குதல் தொடர்பில் வேறோர் ஆளின் சார்பில் சேவை வழங்குநர் ஒருவராக செயலாற்றும் ஆளொருவர் என்று பொருள்படும் ;

"வலையமைப்பு சேவை வழங்குநர்" என்பது பகிரங்க நிலைமாற்று வலையமைப்பொன்றைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்ற, உடைமைகொண்டிருக்கின்ற, தொழிற்படுத்துகின்ற, முகாமைசெய்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற அல்லது தொலைத்தொடர்பு சேவை களை வழங்குகின்ற ஆளொருவர் என்று பொருள்படும் ;

"மூலகாரன்" என்பது எந்த ஆளினால் அல்லது எந்த ஆளின் சார்பில், பெறுகை அல்லது தேக்கம், எதுவுமிருப்பின், அதற்கு முன்னர் தொடர்பாடல் அனுப்பப்பட்டுள்ளதாக அல்லது பிறப்பாக்கஞ் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருள்படும்; ஆனால் அத்தொடர்பாடல் தொடர்பில் இடைவருநர் ஒருவராகச் செயலாற்றும் ஆளொருவரை உள்ளடக்க மாட்டாது ;

"அணுக்கம் வழங்குதல்" என்பது மூன்றாம் திறத்தவர் தகவல் தொடர்பில் எந்தத் தொழில்நுட்ப வழிமுறைகள்மூலம் மூன்றாம் திறத்தவர் தகவலுக்கு அணுக்கம் பெறலாமோ அந்த அவசியமான தொழில்நுட்ப முறைகளை வழங்குதல் என்று பொருள்படும் என்பதுடன், அணுக்கம் வழங்கும் நோக்கத்திற்காக மூன்றாம் திறத்தவர் தகவலின் தன்னியக்க மற்றும் தற்காலிகத் தேக்கத்தையும் உள்ளடக்கும் ;

"பாதுகாப்பு நவடிக்கைமுறை" என்பது படிவமுறைகளின் அல்லது குறிகளின், இனம் காணும் சொற்களின் அத்துடன் எண்களின் குறிமுறையாக்கத்தின், திருப்பி விடையளித்தல் அல்லது ஒப்புக்கோடல் நடிவடிக்கை முறைகளின், மென்பொருளின், வன்பொருளின் அல்லது இதனையொத்த உபாயங்களின் பாவனையைத் தேவைப் படுத்தக்கூடிய ஏதேனும் இலத்திரனியல் ஆவணத்தின் உண்மைத்தன்மையை அல்லது திட்பத்தை அல்லது இரண்டையும் நிலைநாட்டுவதற்கு, சான்றளிக்கும் சேவை வழங்குநர் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறை யொன்று என்று பொருள்படும் ;

"மூன்றாம் திறத்தவர்" என்பது வலையமைப்பு சேவை வழங்குநர் ஒருவர் தொடர்பில் சேவை வழங்குபவருக்கு எந்த ஆளின்மேல் பயனுறுதியுள்ள கட்டுப்பாடெதுவும் இல்லையோ அந்த ஆள் என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*